உ

சிவமயம்



# 'சுந்தரத் தீபம்'

17-08-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

புங்குடுதீவு 6ம் வட்டாரம் - இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சுருவிலைப் புகுந்தவிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்டு அண்மையில் 18-07-1997 வெள்ளிக்கிழமை அன்று இறையடி எய்திய ஓய்வுபெற்ற அதிபர் "வித்தியா கலாபமணி" ஸ்ரீமான் பொன். சோமசுந்தரம் அவர்கள் நினைவாக வெளியிடப்படும் "சுந்தரத் தீபம்" எனும் இந்நினைவு மலர் அமரர்தம் ஆத்மா இறையடியில் நித்திய ஆத்ம சாந்தி பெறவேண்டும் என இறைவனைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பிரார்த்தித்து அன்னார் தம் பாதங்களுக்கே சமர்ப்பணமாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

125, பிக்கரிங்ஸ் வீதி,
கொழும்பு-13.
தொ. பே: 338449

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சரணம் ஐயப்பா!



## அமரர் - "வித்தியா கலாபமணி"

# பொன். சோமசுந்தரம் அவர்கள்

மண்ணகவாழ்வு: 15-05-1930

விண்ணக வாழ்வு: 18-07-1997

## திதி நிர்ணய வெண்பா

தீதிலாத ஈசுரவருடச் சிறந்த நல்ஆடித் திங்கள்
மேதினியில் பூர்வபக்கச் சதுர்த்தசியில் – சோதிதனில்
கலந்தனனாம் பேராசான் சுருவிலூர் சோமசுந்தரனார்
மலரவன்தாள் சேவை மேலென்றே.

–ஆக்கம்: அருட்கவி வேலணை வேணியன்

குறிப்பு:– *ஒவ்வொரு வருடத்திலும் ஆடிமாதத்தில் வரும் பூரணைக்கு முதல்நாள் வரும் சதுர்த்தசி திதியெனக் கொள்ளவும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வித்தியா கலாபமணி"
# பொன். சோமசுந்தரம்

"இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்"

எனும் ஞானசம்பந்தரின் தேவாரத்தை காலை மாலை ஓதி உணர்ந்த பெரியார்தான் அண்மையில் கொழும்பில் இறையடி எய்திய "வித்தியா கலாபமணி" ஸ்ரீமான் பொன். சோமசுந்தரம் அவர்கள். 'எந்த இடர் வந்தாலும் உடல் தளர்வு ஏற்பட்டாலும் என்னை பீடித்துக் கொண்ட நோய் தொடர்ந்தாலும், நிதமும் உனது திருப்பாதங்களைச் சிக்கனப் பிடித்துக் கொள்வேன் இறைவா!' என்று தினமும் காலை மாலை கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகரை சென்று வணங்கி வரம்பல பெற்ற பெரியார்.

அமரர் பொன். சோமசுந்தரம் அவர்கள் புங்குடுதீவு 6ம் வட்டாரம் இறுப்பிட்டி அமரர்கள் திரு. திருமதி ஆறுமுகம் பொன்னையா - வள்ளியம்மை தம்பதியினர் தமக்கு நான்காவது புதல்வராக உதித்தார்.

இவர்தமக்கு மூத்த சகோதரர் திரு. ஆறுமுகம் அவர்கள் அமரராகி விட்டார். மூத்த சகோதரி திருமதி சிவக்கொழுந்து தம்பிப்பிள்ளை கொழும்பில் வாழ்ந்து வருகிறார். அமரர் சோமசுந்தரனாருக்கு நேரேமூத்த சகோதரர் திரு. முருகேசு அவர்களும் இறைசேவைக்கு அழைக்கப்பட்டுவிட்டார். அமரர் தமக்கு இளைய சகோதரர் திரு. சுந்தரம் அவர்களும் இறைபதம் அடைந்துவிட்டார்.

அமரர் திரு. சோமசுந்தரம் அவர்கள் ஒரு சிறந்த விவசாயக் குடும்பத்தில் பிறந்தாலும் தனது கடும் உழைப்பினால் கல்வியில் சிறந்து விளங்கி ஆசிரியராகக் கடமையாற்றி இறுதியில் அதிபராகத் திகழுமளவுக்கு உயர்வு பெற்றார். இவர் யாழ்/ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில், மாத்தளை விஜயா கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி, இறுதியில் சுருவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

அமரர்தாம் ஊர்காவற்றுறை – சுருவில் கிராமத்தில் அமரர்கள் திரு. திருமதி தம்பு – புவனம் தம்பதியினர் தம் ஆறாவது கடைக்குட்டி மகளார் திருமதி தங்கம்மா சோமசுந்தரம் அவர்களைத் தன் தகுதிக்கேற்பப் பெரியோர் விருப்புக்கு ஏற்பத் திருமணம் செய்து கொண்டார். திருமதி தங்கம்மா அவர்களும் 01-11-1986 தீபாவளித் தினத்தன்று இறைபதம் எய்திவிட்டார்.

அமரர் திருமதி தங்கம்மா அவர்களுடன் பிறந்த மூத்த சகோதரிகள் திருமதி கஜவல்லியம்மா, திருமதி மனோன்மணியம்மா, சகோதரர்கள் திரு. தாமோதரம் பிள்ளை, திரு. தில்லையம்பலம் ஆகியோர் அமரத்துவமடைந்து விட்டனர். அமரர் தமக்கு நேரே மூத்த சகோதரி திருமதி யோகம்மா நல்லையா அவர்கள் கனடாவில் வாழ்ந்து வருகிறார்.

அமரர்கள் திரு. திருமதி பொன். சோமசுந்தரம் – தங்கம்மா இருவரும் இல்வாழ்க்கையில் இனிய தம்பதி யினராக ஊர்போற்ற வாழ்ந்த மிக அமைதியான குடும்பம். சுருவில் ஐயனார் பெருமானின் ஆசிகள் நிறையப் பெற்ற குடும்பம். தானதர்மங்களில், பொதுச்சேவைகளில் அயல் போற்ற உற்றார் உறவினர் போற்ற வாழ்ந்த போற்றுதற்குரிய குடும்பமெனலாம்.

இவர்கள் தம் இல்லற வாழ்வின் நல்லறப் பலனாகக் கிடைத்த பிள்ளைச் செல்வங்கள் நால்வர். அமரர்தாம் பிள்ளைகளின் இல்லற வாழ்வின் சிறப்பைக் கண்டுகளித்து வெளிநாடுகள் சென்றும் பார்த்து வந்த பாக்கியமும் நிறையப்பெற்ற தர்மவான்.

அமரர்கள் திரு. திருமதி சோமசுந்தரம் – தங்கம்மா தம்பதியினருக்கு மூத்த புதல்வன் திரு. விமலேஸ்வரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஓர் தொழில்நுட்பவியலாளராக அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்றார். இவர்தாம் புங்குடுதீவு – மண்டைதீவைச் சேர்ந்த அமரர் திரு. சண்முகம் – திருமதி நாகேஸ்வரி தம்பதியினர்தம் புதல்வி நளினியைத் திருமணம் புரிந்து கொண்டார். இவர் ஓர் சர்வகலாசாலைப் பட்டதாரி. இலங்கையில் ஆசிரியை யாகவும் கடமையாற்றியவர். இத் தம்பதியினரால் அமரர் தமக்குக் கிடைத்த பேரக்குழந்தைகள் மூவர். செல்வன் கஜன், செல்வன் கார்த்திக், செல்வி நிவேதா ஆவர்.

இரண்டாவது மகனார் திரு. மணிவண்ணன், கனடா நாட்டில் வாழ்ந்து வருகின்றார். இவர் துணைவியார் திருமதி வேஜினியா. இத்தம்பதியினர் தம்பால் அமரர் தமக்குக் கிடைத்த பேரன் செல்வன் றயன்.

மூன்றாவது மகளார் திருமதி ரதி – மன்மதராஜன். திரு. மன்மதராஜன் லண்டன் மாநகரில் ஒரு பொறியியலாளராகக் கடமையாற்றி வருகின்றார். அமரர்தாம் இவர்தம் தாய் மாமனாவார். இக்குடும்பத்தின் சிறப்புறு வாழ்வில் அமரர் கண்ட பேரக்குழந்தைகள் செல்வன் லவன், செல்வி பானு ஆகிய இருவர்.

நான்காவது கடைக்குட்டி மகளாரே திருமதி திருமகள் – மனோரஞ்சன். திரு. மனோரஞ்சன் தம் தந்தையார் அமரர் திரு. தில்லையம்பலம் அவர்கள் திருமதி திருமகளுக்குத் தாய்மாமனார். அமரர் திரு. தில்லையம்பலம் கொழும்பில் பிரபல வர்த்தகராகத் திகழ்ந்தவர். இவர்தம் துணைவியார் திருமதி சரஸ்வதி தில்லையம்பலம் ஆவார். திரு. மனோரஞ்சன் அவர்களும் தொடர்ந்து தந்தையாரின் தொழில் ஸ்தாபனத்தையே நடாத்தி வருகிறார். இறுதி காலவரை பிறந்த மண்ணாம் இலங்கையில் கடைக்குட்டி மகளார் “திரு” தம்முடன்தான் அமரர் பொன். சோமசுந்தரம் அவர்கள் வாழ விரும்பினார். அயல்நாடுகளில் வாழ்வதிலும் பார்க்க நாட்டில் நிலவும் அல்லல்களுக்கு மத்தியிலும் பிறந்த மண்ணில் சுதந்திரமாக உலாத்தி வாழலாம், சிறந்த சமூக சேவைகளைத் தமிழ் மக்களுக்காகச் செய்யலாம் என்பது அமரர் தம் சிந்தனையாக இருந்தது. அத்தோடு இறுதிவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்தம் சுகநலங்களைக் கவனித்துவந்த பெருமையும் அரவணைப்பும் "திரு"வின் குடும்பத்தையே சாரும். இத் தம்பதியினர் தம்பால் அமரர் தமக்குக் கிடைத்த பேரச்செல்வங்கள் செல்வன் லக்ஷ்மன், செல்வி மயூரி, செல்வன் ராம்ராஜ் ஆகிய மூவர்.

அமரர்தம் சேவை வாழும் காலத்தே ஊர்மக்களால் உற்றார் உறவினர் நண்பர்களால் போற்றுதற்குரியது. அமரர் தம்மை ஓர் நல்லாசானாகவும், இறைதொண்டராகவும், இலக்கிய ஆர்வலராகவும், சமூகசேவையாளராகவும் யான் நன்கறிவேன். கவிதைகள் புனைவதில் மிகத்திறைமைசாலி. எனது இலக்கிய சேவையில் இணைபிரியா அன்பராகத் திகழ்ந்தவர், துணையாக நின்றவர்.

அமரர் அவர்கள் தாம் லண்டன், சுவிஸ், அவுஸ்திரேலியா முதலிய நாடுகளைப் பார்த்து அங்கு தொடர்ந்து வாழ விரும்பாது பிறந்த மண்ணில் சுதந்திர வாழ்க்கை மேலெனக் கருதியே இலங்கை திரும்பினார்.

இறுதியில் "வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய் வீழினும் உன்கழல் தொழுதெழுவேன்" எனும் ஞானசம்பந்தர் தேவாரத்துக்கொப்ப இறைகழலடிகளை எய்தினார்.

அன்னாரது பிரிவால் துயருற்று இருக்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மூத்த சகோதரியார், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எல்லாம்வல்ல இறைவனே மன ஆறுதலைக் கொடுக்கவேண்டும் எனவும், அமரர்தம் ஆத்மா இறையடியில் நித்திய ஆத்மசாந்திபெற வேண்டும் எனவும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி மலரவன் திருப்பாதங்களை வணங்கித் துதிக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்பன்
வேலணை வேணியன்
தலைவர்
அ. இ. கண்ணதாசன் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பணியாற்றிய ஆசிரியர்

புங்குடுதீவில் பிறந்து சுருவிலூரில் வாழ்ந்து ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றி அண்மையில் அமரத்துவம் அடைந்த பொன். சோமசுந்தரம் அவர்களது இழப்பு சுருவில் மக்களுக்கு ஓர் பேரிழப்பாகும்.

அமரர் சோமசுந்தரம் அவர்கள் ஆசிரியப் பணியை அறப்பணியாகவும், அருட்பணியாகவும் கொண்டு ஒழுகி வந்தார்கள். சீரியவாழ்வு, நிரம்பிய கடவுள் பக்தி, சிறந்த ஆலயத் தொண்டு ஆகியவை நாம் அவரிடம் கண்ட பண்புகளாகும்.

சுருவில் பாடசாலையில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றிய காலத்தில் மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், நற்பண்பு, சமயப்பற்று ஆகியவற்றில் மிகுந்த அக்கறை செலுத்தி நம் கிராமத்து மாணவர்களை நற் பிரஜைகளாக வாழ வழி காட்டினார்கள். "எழுத்தறிவித்தவன் இறைவனா வான்" என்பதற்கேற்ப அவரிடம் பயின்ற எம் கிராமத்து மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் அமரர் அவர்களை ஓர் நல்லாசானாக மதித்துப் போற்றி நடந்தனர்.

எமது கிராமத்தில் கோவில் கொண்டு அருள்பாலித்து வரும் ஐயனாரின் மேல் அமரர் அவர்கள் அளவற்ற பக்தி உடையவராக இருந்தார். ஐயனார் ஆலய பரிபாலனத்திலும், ஆலயத்திருப்பணிகள், பூசை திருவிழாக்கள் முதலியவற்றிலும் பங்கு கொண்டு அரும்பணியாற்றினார்கள். பல வருடங்களாக ஐயனார் ஆலய பூசை திருவிழாக்களின் போது பஞ்ச புராணம் ஓதுவது, திருவெம்பாவை காலத்தில் அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பாடுவது அமரர் அவர்களின் பணியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது. இனிமையான குரல்வளம் கொண்ட அமரர் அவர்கள் பண்ணுடன் தேவாரம், திருவாசகம் முதலியன பாடும் பொழுது கேட்போர் மெய்மறந்து நிற்பர். ஆலயத்தில் நடைபெறும் புராணப்படிப்பு, கூட்டுப்பிரார்த்தனை ஆகியவற்றிலும் கலந்து சிறந்த தொண்டாற்றினார்கள். சுருவில் முன்னேற்றச்சங்கத்தில் முக்கிய நிருவாகப் பங்காற்றி சமுதாயப்பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

நாட்டு நிலமை காரணமாக சுருவில் கிராமத்தை விட்டு வெளியேறி கொழும்பில் வசித்த காலத்தில் ஐயனார் ஆலயம் பூசையில்லாமல் பூட்டப்பட்டிருக்கும் நிலமையை எண்ணி மனம் வருந்தினார்கள். விரைவில் ஊர்திரும்பி ஐயனார் ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகளை முறைப்படி ஆரம்பித்து நடத்த வேண்டுமென்ற அவாவுடன் இருந்தார்கள். அவரது இந்த ஆசை நிறைவடைய முன்பு அவர் அமரத்துவம் அடைந்து விட்டார். அருட் பணியாற்றி அமரத்துவம் அடைந்த ஆசிரியர் அவர்களின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

த. சண்முகலிங்கம்
தலைவர்
சுருவில் ஐயனார் கோவில்
பரிபாலன சபை

கொழும்பு-07
17-08-1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியவர் ஒருவரை இழந்தது "சுருவில்"

அமரர் திரு. பொன். சோமசுந்தரம் அவர்கள் ஓர் நல்லாசானாக எமது கிராமத்தில் திகழ்ந்ததை என் இளமைக் காலமுதல் நான் நன்கு அறிவேன். சமய சமூகத் தொண்டு களில் எமது கிராமத்தில் அவர்தாம் முன்னின்று உழைத்த பெருங்குணங்களை எமது சுருவில் கிராம மக்கள் என்றும் மறக்கமுடியாது. தான் பிறந்த புங்குடுதீவு – இறுப்பிட்டிக் கிராமத்திற்கும் அது பெருமை எனலாம். இவர்தாம் கொழும்புக்கு வந்து தனது இனிய சமூகத் தொண்டுகள் புரியும் பண்பை எம் தீவக மக்களுக்கு நல்கத் தவறவில்லை. இன்னும் பலகாலம் வாழ்ந்து எமது மக்களுக்காகச் சேவை செய்யக்கூடிய இனியவர் ஒருவரை இழந்தது "சுருவில்". இவ்விழப்பு எமக்கு மட்டும் பேரிழப்பல்ல, அவரது மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகள், உற்றார் உறவினர், நண்பர் கள் அனைவருக்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா இறையடியில் நித்திய சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை நோக்கிப் பிரார்த்திப்பதொன்றே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்பின்
மாணிக்கம் தவயோகராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்த முடிபுகளை ஏற்றுக்கொள்வோம்!

அன்பர் ஒரு அமரராகிய சோகம் நெஞ்சைப் பிசைகிறது. நினைந்து நினைந்து வருந்தச் செய்கிறது. தேவையான ஒருவரின் இல்லாமை துன்பமானது.

அன்பர் பொன் சோமசுந்தரம் அவர்கள் என் ஊரவர் உறவினர் நண்பர் பழகுவதற்கு இனிய பண்பாளர் ஆசிரியராய் அதிபராய் கல்வி உலகுக்குச் சேவையாற்றியவர். புங்குடுதீவு இறுப்பிட்டி பெரியபுலம் பிள்ளையாரிடத்திலும், சுருவில் ஐயனார் அப்பனிடத்திலும் ஆரா அன்பினராய் விளங்கியவர்.

புகுந்த இடமான சுருவிலில் பொதுப் பணிகளாற்றிப் புகழ்பெற்றவர். நல்ல தமிழாசிரியர் சைவத்திரு முறைகளில் ஆழந்த பற்றும் மூழ்கிய பக்தியும் உடையவர். புலம்பெயர்ந்து கொழும்பில் இருந்த போது அவரோடு உலவிய நாட்கள் மறக்க முடியாதன. ஜிந்துப்பிட்டி முருகன் திருக்கோயிலில் நடந்த திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் தொடர் சொற்பொழிவுகளுக்கு நாள் தவறாமல் இடம் மாறாமல் நாங்கள் இருந்து கேட்டு சிந்தித்து உரையாடித் தெளிந்த பொழுதுகள் நெஞ்சின் அலைகளாய் எழுகின்றன.

“ஏகன் அனேகன்” என்னும் பன்னிருதிருமுருக தோத்திரத் திரட்டினை நாங்கள் இருவரும் இணைந்து 1993ம் ஆண்டு தொகுத்துத் திருப்தி கொண்ட கணங்கள் பசுமை நிரம்பிய பதிவுகளாய் உள்ளன. சைவசித்தாந்த நெறி முறைகளில் பயிற்சியுடைய வித்தியா கலாபமணியான பொன். சோமசுந்தரம் அவர்கள் மனிதப் பயணங்களை முடித்துக் கொண்டு மகேஸ்வர யாத்திரை புறப்பட்ட ஆன்மீகச் செல்வரானார்.

எப்பவோ முடிந்த காரியங்களின் நடை முறைகளே பிறப்பும் இறப்புமாகும். முடிந்த முடிபுகளை ஏற்றுக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமரின் இழப்பால் துன்பமடையும் மக்கள் மருமக்கள் பேரக்குழந்தைகள் உற்றார் உறவினர் அனைவருக்கும் கடவுளும் காலமும் அமைதியை வழங்கவும் அமரரின் ஆன்மா இயற்கைப் பெறுபேறு அடையவும் பிரார்த்திக்கிறேன்.

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு" – *குறள்*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புலவர் ஈழத்துச் சிவானந்தன்

# ஊரைப்பேணிய ஒப்புரவாளன்

"உலகெலாம் ஒரு பெருங்கனவு அஃதுளே
உண்டு உறங்கி இடர் செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்
கனவிலும் கனவாகும்" – என்றான் பாரதி

நிலையாமையே இவ்வுலகில் நிறைந்து காணப்படுவதாய் வள்ளுவனும் வரையறை செய்வான்.

"நெருன லுளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

இங்ஙனம் நிலையாமைபற்றி ஆன்றோர்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும்,

இன்றிருப்பார் நாளை இலையென்னும் உண்மையை நிதர்சனமாய் தினமும் கண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் மரணம் ஏனோ நம் மனதைப் பாதிக்கத் தான் செய்கிறது.

உயர் திரு. பொன். சோமசுந்தரம் அவர்களின் மறைவும் மேற்சொன்ன வகையில் தொடர்புடைய அனைவர் மனத்தையும் பாதித்தது உண்மை. யாழ்ப்பாணத்தின் குட்டி அமெரிக்கா என்று சொல்லப்படுவது சுருவில் ஊர். ஊரைச் சார்ந்த பெரும் பான்மையான ஆண்மக்கள் வியாபாரத் திற்காய் வெளியூர் களில் வசிக்க, சோமசுந்தரம் ஐயா போன்ற ஒரு சில பெரியவர்கள் தான் ஊரினை முன்னின்று அறவழியில் நடத்தி வந்தனர்.

சுருவிலில் கோயில் கொண்டுள்ள ஐயப்பன்மேல் எல்லையில்லா பக்திபூண்டவர். கோயிலிலோ, ஊரிலோ எந்த விசேடமானாலும் அவர் முகம் முன்னிற்கும். ஒப்புரவாளனாக வாழ்ந்த அப்பெரியார் தம் வாழ்வு, வினைமுடிய நிறைந்தது. அழிவது உடலே! உயிர்க்கு என்றும் அழிவில்லை. "இது இந்துமதம் கூறும் பேருண்மை"

தத்துவம் உணரும் பக்குவமுடைய அவர்தம் குடும்பத் தார் இவ்வுண்மை உணர்ந்து அவர் தம் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பார்களாக. அவருடன் இணைந்த நல்லுள்ளங்கள் எல்லாம் அப்பிரார்த்தனையில் சேர்ந்துகொள்ளும்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

இ. ஜெயராஜ்
(கம்பன் கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் கண்ணைத் திறந்து வைத்த ஆசான்

எம் வாழ்விற்கு வழி காட்டியாய்
வாழ்ந்திட்ட உத்தமனே,
பாதி வழியில் கைவிட்டுச் சென்றதேனோ?
ஆலமரமாய் அனைவர்க்கும்
நிழலாய் இருந்தவரே,
எமையெல்லாம் தவிக்கவிட்டு
வேரோடு சாய்ந்ததேனோ?
மகளென்றும் மருகரென்றும்
பாசம் பொழிந்த உத்தமரே!
எம் கதறலுக்குக் காது கொடாமல்
இருப்பதேனோ!
ஆசானாய் இருந்து எம்
அறிவுக் கண்ணைத்
திறந்து வைத்துத் தாங்கள்
கண்மூடிக் கொண்டதேனோ?
பேரப்பிள்ளைகள் இங்கு
தவியாய்த் தவிக்கின்றனர்
உங்கள் பிரிவு தாங்காமல்
எம் கண்கண்ட தெய்வமாய்
வாழ்ந்திட்ட உத்தமனே
உங்கள் பொன்னுடல்
பூமிக்குப் பாரமென்றோ போய் மறைந்தீர்?
மண்ணுலகை விட்டு
விண்ணுலகு சென்றாலும்
மலைமீது வைத்த மங்காத்தீபம் போல்
உங்கள் புகழ்
மிளிர்ந்து கொண்டிருக்கும் என்பது உறுதி.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
சுருவில் ஐயனாரின் அருள் வேண்டி நிற்கும்

சுருவில் இ. பாலசுப்ரமணியம் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நோக்குடைய கல்விச் சேவையாளர் அமரர் பொன்னையா சோமசுந்தரம்

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி 6ம் வட்டாரத்தில் திரு. திருமதி பொன்னையா தம்பதிகளுக்கு அருமை மகனாக பிறந்து, வணிகத் துறையில் பெரும் தனவந்தர்களை உருவாக்கி பெருமை கண்ட ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள சுருவில் எனும் பெரும்பதியில் வாழ்ந்த திரு. திருமதி தம்பு புவனம் தம்பதிகளின் அருமை மகளார் தங்கம்மா அவர்களை மணம் முடித்து அகிலம் போற்றும் ஆசிரியத் தொழில் மூலம் பல ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளின் அறிவுக் கண்களை திறந்து தான் பெற்ற இந்த அறிவின் திறமைகளை, தான் பெற்ற தகுதிகளை எல்லாம் தான் சார்ந்து வாழ்ந்த கிராமத்து மக்களுக்காக அர்ப்பணித்து தான் இறுதிவரை வாழ்ந்த மண்ணின் மக்களால் மதிக்கப்பட்டும் போற்றப்பட்டும் மிகுந்த ஆளுமையுடன் என்றும் இளமையின் தோற்றத்துடன் கூடிய இனிய உடல் அமைப்புடன் ஒட்டி உறவாடி உலவிய ஓர் ஒப்பற்ற நல் ஆசிரியரை இனிய நல்அதிபரை சமூகத் தொண்டரை ஓர் விவசாய மன்னனை எமது தீவக மக்களும் மண்ணும் இழந்துவிட்டது.

தான் பிறந்த புங்குடுதீவு மண்ணில் உள்ள சித்திவிநாயகர் வித்தியாலயத்திலும், புங்குடுதீவு கிழக்கு கணேசவித்தியாலயத்திலும் தனது ஆரம்பக் கல்வியினைப் பெற்று, உயர் கல்வியினை யாழ் மத்தியகல்லூரியிலும் தொடர்ந்தார். கல்விக்கணைகளால் கண்திறக்க வைத்த எம் ஆசிரியர் தனது ஆசிரியப் பணியினை 1956ம் ஆண்டு தொடக்கம் 1962 வரை வட்டுக்கோட்டை யாழ் கல்லூரியிலும், 1962 ம் ஆண்டு தொடக்கம் 1970 ம் ஆண்டுவரை மாத்தளை விஜயாக்கல்லூரியிலும் பின் தான் பெற்ற கல்வியறிவின் சிறப்புகளை தான் சார்ந்து வாழும் மக்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் மிகுந்து சுருவில் றோமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலயத்தில் ஆசிரியராக பதவியேற்றுப் பின் அதிபராக ஓய்வுபெறும் வரை கடமையாற்றினார். இக்காலம் இப்பகுதி மக்களுக்கு ஓர் பொற்காலமாகும். இக்காலப்பகுதியில் தீவுப்பகுதி பாடசாலை விளையாட்டுக் குழுவின் தனாதிகாரியாக இருந்து தீவக மாணவர்களை விளையாட்டுத்துறையில் ஈடுபடுத்தி தீவக பாடசாலைகளுக்கு பல பெருமைகளைத் தேடிக்கொண்டவர். தனது இளமைக் காலங்களில் கல்விகற்றபோது உண்டான கஷ்டங்களையெல்லாம் வளர்ந்துவரும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு மிகுந்த பரிவுடனும், வாஞ்சையுடனும் எடுத்துக் கூறி அவர்கள் கல்வியில் நாட்டங்கொண்டு உயர்வடைவதற்கு வழியமைத்த பேராளன். இன்று அவரின் கல்வியறிவினைப் பெற்ற பல ஆயிரம் மாணவர்கள் உலகின் பலநாடுகளுக்கும் சென்று கல்வியறிவிற் சிறப்புற்று விளங்கி வாழ்ந்து வருவதனை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். தான் வாழ்ந்த கிராமத்து மக்களால் "சோமு வாத்தியார்" என அன்போடு அழைக்கப்பட்ட எம் ஆசிரியர், பெரும் வணிகமீட்டி நிறைந்த செல்வங்கள் பெற்று வற்றாத நிதி படைத்த வள்ளல்களும், கற்றறிந்த சான்றோர்கள் நிறைந்து காணப்பட்ட மண்ணில் செய்யும் தொழிலே தெய்வமெனப் போற்றிடும் தனது ஆசிரியத் தொழிலில் மட்டும் வரும் ஊதியத்தோடு, சிறப்போடு அவர்கள் மத்தியில் பெயரோடும், புகழோடும் வாழ்ந்தார் என்பதனை நாம் நினைத்திடும் போது வியப்பாய் உள்ளது. தான் பெற்ற கல்வி இன்பம் இவ்வையகம் பெற வேண்டும் என்ற புனித நோக்குடைய ஓர் கல்விச்சேவையாளர்.

இவரது ஆசிரியப்பணியும், சமூகப் பணியும் சிறப்புற்று விளங்குவதற்கு இவரது அருமைத் துணைவியார் அமரர் திருமதி தங்கம்மா அவர்கள் உறுதுணையாக இருந்துள்ளார் என்பதனை நாம் அறியக்கூடியதாகவுள்ளது. வாசிப்பதால் மனிதன் பூணரத்துவமடைகிறான் என்றவாக்குக்கு ஏற்ப சுருவில் வாசிகசாலை, சுருவில் கிராமமுன்னேற்றச்சங்கம், ஐயனார் கோயில் பரிபாலனசபை போன்றவற்றில் பொறுப்பு மிக்க பதவிகள் வகித்து இவற்றின் வளர்ச்சிக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையே அர்ப்பணித்தார். கற்றுத் தேர்ந்த அறிவும், தமிழ் இன உணர்வும், புலமையும், நயம்பட உரைத்திடும் கவிதையும், இனிய வெண்கலக்குரல் வளமும் இவருக்கு இயல்பாய் அமைந்து அவரின் கற்றறிந்த புலமையை வெளிக்காட்டிக் கொண்டிருந்தன.

நான் இவரிடம் கல்வியின் சிறப்புக்களை பெற்றுக்கொள்ளாவிட்டாலும் மிகுந்த தமிழ் இனஉணர்வு, நாட்டுப்பற்றுடன் விடுதலை வேட்கையினை தன்நெஞ் சங்களில் தமது இளம்வயதிலேயே சுமந்து கொண்டும், பௌதீக, உயிரியல், விஞ்ஞானத்துறையில் மிகுந்த ஆற்றலும், அறிவும் கொண்டிருந்து தற்போழுது லண்டன் மாநகரில் பொறியியல் துறையில் சிறப்புற்று பணிபுரிந்திடும், என் அன்புக்குரியவருமான ஆசிரியரின் அருமை மருமகனார் திரு. மன்மதராஜா அவர்களிடம் கல்வி பயின்ற வகையில் பெருமை கொள்வதோடு ஆசிரியர் பிறந்த மண்ணில் நானும் பிறந்தேன் என்றும் பெருமை கொண்டும் ஆசிரியரின் உடன்பிறந்தார் சுற்றத்தார் உறவினர்களை நன்கு அறிந்தவன். அமரர் ஆசிரியப் பணிமூலம் ஆற்றிய சேவையும் சமூகத் தொண்டுகளும் அவர் பிறந்த மண்ணினதும் வாழ்ந்த கிராமத்தினதும் பெயரை என்றும் பெருமைப்படுத்திக் கொண்டும் அவர் எமக்கு விட்டுச் சென்ற எச்சங்களான அவரது அருமைப் பிள்ளைகள் எம்மத்தியில் உள்ளார்கள் என்ற நம்பிக்கையோடு அவரது ஆத்மா சுருவில் ஐயனார் திருவடி நிழல்களை பெரும் பேறெய்த சென்றடைந்திருக்கும் என்ற மனநிறைவோடு அவரின் உற்றார் உறவினர்களுடன் நானும் பிரார்த்திக்கின்றேன். வாழ்க வளமுடன் வாழிய சோமர் புகழ்.

புங்குடுதீவு வாழ் மக்கள் சார்பாக


தீவகம் – சோம. சச்சிதானந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா உதயன் பத்திரிகையில் வெளியான இரங்கலுரை

# அதிபர், சமூகசேவையாளர் பொன் சோமசுந்தரம் மறைந்தார்



கம்பீரமான தோற்றம், நிமிர்ந்த நடை, வெள்ளை ஆடை, நெற்றியிலே நீறு சந்தனப் பொட்டு செந்தண்மையான முகம் உள்ளத்திலே உண்மையொளி, எல்லாவற்றிற்கும் மேலாக இனிமையான கணீர் என ஒலிக்கும் குரல், பண்ணோடு பக்தி இசை பெருக்கும் வன்மை, இவற்றுடன் 'ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லலது ஊதியம் இல்லை உயிர்க்கு' குறளின் வாழ்க்கை இரகசியம். யாழ் இனிது குழலினிது என்பர் சோமரின் பக்தி இசை கேளாதவர்.

பிறந்த வீடு புங்குடுதீவு, இளமையிற் பண்ணிசைக்கல்வி, அத்துடன் கற்றது பயின்றது யாவும், ஆசிரியக்கலை பல்லாண்டு பணி புரிந்தது புகழ்மலிந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி.

குமரப்பருவம் பொன்னும் பொருளும் மிக்க ஐயப்பன் சந்நிதான சுருவில் கிராமம். நிலம் மிகுந்தது, நெல் மிகுந்தது, நீர் மிகுந்தது, கள் மிகுந்தது, கனி மிகுந்தது, பால் மிகுந்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றறிந்த சான்றோரும், வற்றாத நிதிபடைத்த வள்ளல்களும், தாழ்விலா வர்த்தகர்களும் வாழ்கின்றனர்.

காவற் தெய்வம் ஐயனார் பூரணகலையம்சத்துடன் காட்சியளிக்கின்றார். இங்குதான் தம்பு புவனம் மகள் தங்கம்மாவைத் திருமணஞ்செய்து விமலேஸ்வரன், மணிவண்ணன், ரதி, திருமகள் என நால்வரும் குறையாத செல்வம் கொண்டு அவுஸ்திரேலியா, கனடா, லண்டன், இலங்கை என வாழ்கின்றனர். அதிபர் அமரர் வகிக்காத பதவிகளோ, தொடாத சமூக சேவைகளோ கிடையாது. சுருவில் ஐயனார் ஆலய பூசைகளில் பஞ்சபுராணம் பாடாத நாட்களோ அருமையிலும் அருமை. மகாகும்பாபிஷேகம், நடராஜர் அபிஷேகம், வருடாந்த உற்சவம், கோவில் திருப்பணிவேலைகள் யாவற்றிலும் இவரின் பங்களிப்பு மகத்தானவை. சுருவிற் பாடசாலை அதிபராகி ஆற்றிய சேவைகளோ சொல்லிலடங்காதன. இவை சோமரின் புகழ் பரப்பும் எச்சங்களில் சில. செயலிற் செயலான கோவில் நிர்வாகம் யாவும் இவரே செய்து முடிப்பார்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்" என்பது பொய்யா மொழி.

சோமர் புகழோடு தோன்றிப் புகழ்மணக்கச் சைவாசிரியராக வாழ்ந்து காட்டினார். சலம்பூவோடு தீபம் மறந்தறியாதவர், தமிழோடு இசைபாட மறந்தறியாதவர். புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனத் திருமுறைகளை ஓதிக்கொண்டே உயிர்துறந்தாராம். அவர்தம் ஈமக்கிரியைகளில் கலந்துகொள்ள முடியவில்லையே என்று ஏங்கி அழுகின்றோம்.

கனடா வாழ் சுருவில் மக்கள் சார்பாக
தி. நடராசா, கி. திருவருள்

குறிப்பு:- நன்றி உதயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் மதிக்க வாழ்ந்த உத்தமர்

ஊரார் மதிக்க, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த உத்தமர் தான் அமரர் திரு. பொன் - சோமசுந்தரம் அதிபர் அவர்கள். அன்னாரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். அமரர் அவர்கள் நோய்வாய்பட்டு இருந்த போது இடைக்கிடை அவரது இல்லம் சென்று கலந்துரையாடி ஆறுதல் வார்த்தை கூறிவந்தேன். அன்னார் திடீரென மறைந்த செய்தியை என்னால் நம்பவே முடியவில்லை. அமரரின் இல்லம் சென்றபோது தான் மறைந்த செய்தி உண்மை என்றறிந்து கொண்டோம். நாமும் அன்னாரின் உற்றார் உறவினருடன் அவர்களின் துயரில் பங்கு கொண்டோம்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பது பொய்யா மொழி. அமரர் தம் வாழ்நாளில் புகழோடு வாழ்ந்தார் புகழோடுதான் மறைந்தார். நான் சிலகாலம் அமரர் அவர்களோடு கூடிப்பழகிய வகையில் அவரிடத்தில் உள்ள மனிதப் பண்பு, அறிவாற்றல், வந்தோரை இன்முகத்துடன் உபசரிக்கும் மனப்பாங்கு ஆகிய பண்புகள் அன்னாரை உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கத்தக்கதாய் அமைந்துள்ளன.

இவை மாத்திரமல்ல, சமூகத்தொண்டு, கோவிற் தொண்டு, தன்னலங்கருதாது எவருக்கும் உதவும் மனப்பான்மை ஆகிய சேவைகளால் சாதாரணமக்களாலும் கற்றறிந்தோராலும் பாராட்டினைப் பெற்றவர்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

என்னும் தமிழ்மறைக்கிணங்க, அமரரின் எச்சங்களாகிய மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் உயர்நிலையில் இருக்கிறார்கள். ஒருவர் தக்கவர், தகாதவர் என்பதை அவரது எச்சங்களின் பண்புகள், முன்னேற்றம் ஆகியவற்றைக் கொண்டு அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரரின் தொண்டினையும், தன்னலமற்ற சேவையினையும் ஈடுசெய்ய இனியார் உளர்? அன்னார் ஆற்றிய சேவைகள் இனிப் போதும் என்று காலன் கவர்ந்து விட்டான் போலும்.

அன்னாரைப் பிரிந்து துயருறும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் யாவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபம் உரியதாகுக.

அமரரின் ஆன்மா எல்லாம் வல்ல சுருவில் ஐயனார் தம் திருவடிகளில் சாந்தி பெறுவதாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்வுலகு"

அன்புடன்
சி. கணபதிப்பிள்ளை குடும்பத்தினர்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

---

# சோமசுந்தரப் பேராசானே!

குறையற்ற வாழ்வே வாழ்ந்து குணக்குன்றாய் திகழ்ந்தே!
இறையழைப்பை ஏற்று இப்பூவுலக வாழ்வை ஒழித்தாய்!
சிறைபட்டது என்னுளத்தே நின்பேரன்பு இன்றுமென்றும்!
நிறைவுறு மனமே கொண்ட நின்பெருங் குணங்களெல்லாம்!
மறையவே மாட்டாதய்ய எனதுளமதில் பேராசானே!
அறைகூவி அலறுகின்றார் தான் ஈன்ற மக்கள் செல்வம்!
உறைவியே இறைபதத்தில் ஈடிலா ஆத்ம சாந்தி பெற்றே!
கறையிலா வாழ்வு வாழ்ந்தசோமசுந்தரப் பேராசானே!.

- வேலணை வேணியன்-

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அறிந்த மாமாவே!

அந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன் – நான்

உங்கள் மூத்த மைந்தன் விமலேஸ்வரன் தனைக்

கரம்பிடித்த நாள்முதலாய் உங்களை நான் நன்கறிவேன் .

அன்று ஓர் திங்கட்கிழமை சுருவில் எனும் ஊர்தனிலே பசும் சோலைகளும், பச்சைப்பசேலெனும் நெல் வயலும், பறவைகளின் கீதங்களும் சூழ்ந்திருக்க, ஐயனார் கோயில் மணியோசையும் சேர்ந்தொலிக்க அமைந்திருந்த 'திருப்பரங்குன்றம்' எனும் திருப்பதிதனில் "வலது காலை எடுத்து உள்ளே வாருங்கள்" என்ற குரல் கேட்க புகுந்த வீடு நுழைந்தேன் நான். அந்த நிமிடம் வீட்டின் மனையாளைத் தேடினேன். அவளை அங்கு காணவில்லை. ஆம் அவரையும் அங்கு காணவில்லை. பூஜை அறைதனில் தெய்வமாகிவிட்ட தன் அன்பு மனைவியை தன் இதயத்தில் இருத்தி தெய்வமாய் வழிபடும் பாங்கை – அந்த அன்பை அங்கு தெய்வத்தோடு தெய்வமாய் மாட்டப்பட்டிருந்த அம்மையாரின் படம் எடுத்துக் கூறிற்று!

அன்று நான் அறிந்தேன் உங்கள் பாசத்தை!

அதுமட்டுமல்ல மனைவியை இழந்தும் – நீங்கள்

கடமையைப் பெரிதாய் மதித்துக் குடும்பம் சீர்குலையாது, தன் மக்கள் நால்வரையும் நல்வழிப்படுத்தி, நல்வாழ்வும் அமைத்துக் கொடுத்தீர்கள். பிள்ளைகள் நால்வரையும் நன்கே பேணி, நல்லறிவுரைகள் பல புகட்டி நல்வாழ்வு வாழ இறுதி வரை முயன்றீர்கள். என் கணவர் மனம் தளரும் போதினிலே ஆறுதல் வார்த்தைகள், அர்த்தமுள்ள கருத்துக்கள் நிறைந்த கதைகள் பல கூறி ஊக்குவித்தீர்கள். ஏன் நான் கூட பலதடவை மனம் கலங்கியிருந்த வேளை தந்தையுமாய், அன்புள்ள மாமனுமாயிருந்து நீங்கள் அறிவுரைக் கடிதங்கள் பல வரைந்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று நான் அறிந்தேன் உங்கள்

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை!

சுருவிலில் மட்டுமன்றி எவ்வூர் சென்றாலும்
நல்மதிப்பு - உங்களுக்கு

கல்லூரிகளிலும் சரி, நான்கு சபைகளிலும் சரி,

சைவ தமிழ் மன்றங்களிலும் சரி, உற்றார், உறவினர், நண்பர்கள், பெரியோர்களிடத்திலும் சரி 'சோமசுந்தரம் மாஸ்ரர்' என்றால் ஓர் தனி மதிப்பு உங்களுக்கு. தமிழறிவும், சைவஉணர்வும் ஒருங்கே கூடித்தழைத்து நின்ற உங்கள் அறிவு கண்டு வியந்தேன் நான். பெருமிதமும் அடைந்த துண்டு.

அன்று நான் அறிந்தேன் உங்கள் மகிமைதனை!

ஆனால் ஒன்று மட்டும் புரியவில்லை?

நிலையான, உறுதியான, தெளிவான எண்ணமும், நற்சிந்தையும், தந்தைக்கே உரித்தான பாச உணர்வும், பண்பிற்கு இலக்கணமும், கடமையில் கண்ணும் கரத்தும் கொண்ட பெரியார் நீங்கள்.

ஆனால் ஒன்று மட்டும் புரியவில்லை?

உங்களுக்கு பேத்தி பிறந்த சேதி கேட்டு மனமிக மகிழ்ந்ததாய் அறிந்தேன் நான். எல்லாப் பேரப்பிள்ளைகட்கும் நீங்களே பெயர் சூட்டி மகிழ்ந்தீர்கள். மறுநாள் தாத்தா இவளுக்கும் ஓர் நாமம் சூட்டியிருப்பார் எனும் சேதி கேட்க ஆவலுடன் காத்திருந்தேன் வைத்தியசாலை வாசலிலேயே!

வந்தார்கள் எம்மைக்காண...... என் கணவர் கலங்கி நின்றார்....... என் மைந்தன் கூறி நின்றான் "தாத்தா இறந்து விட்டார்" என்று. கலங்கிவிட்டேன், திகைத்துவிட்டேன்.... கத்தியழ முடியவில்லை ஐயா........ காரணம் நாம் இருந்த இடம் வைத்தியசாலை....... ஆறுதல் கூறி நின்றாள் கடமையில் நின்ற தாதி. எம் மகளுக்கு மட்டும் நாமம் சூடாமல் காலன் உங்களைக் கவர்ந்தது ஏனோ? புரியவில்லை.......?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல,

அறிவு வந்த உங்கள் மூத்த மைந்தன் கஜன் ஏழு வயது நிரம்பப் பெற்றான்.

தாத்தா நோயுற்ற விபரம் அறிந்து ஆசையுடன் வரைந்திருந்தான் மடல் ஒன்று – தாத்தாவிற்கு அக் கடிதம் தானும் கைக்கு வந்து எட்ட முன்பு அக் கொடிய காலன் எட்டிவிட்ட அவசரம் தான் ஏனோ? புரியவில்லை.......

நான் அறிந்த மாமாவே மனம் மிக நோகின்றேன்

ஆறுதல் அடைய முடியவில்லை.........

கையிலே குழந்தை ஒன்று, கவலைகள் நிறைந்து கொண்டு கலங்குகின்றேன் தனித்து நின்று, பக்கத்தில் கணவர் இல்லை கவலையைப் பகிர்ந்து கொள்ள, பிள்ளையைச் சுமந்தேன் நேற்று, கவலையைச் சுமக்கின்றேன் இன்று,

காலமோ சுழல்கின்றது நம்மவர் விதிப்படியே

நாம் எதுவும் செய்வதற்கில்லை எல்லாம் அவன் செயலே.

இறுதியாக ஒன்று

உங்கள் இறுதிக் கடமைகளில் கூடக் கலந்து கொள்ள முடியாத பாவியாகி விட்டேன் – நான்

ஆனாலும் நீங்கள் அவுஸ்திரேலியாவில் எம்முடன்

கழித்த சில நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன் – ஆறுதல் அடைகின்றேன்.

உங்கள் அறிவுரைக் கடிதங்களை மீண்டும் பார்க்கின்றேன் – ஆறுதல் அடைகின்றேன்.

என் கணவர் தந்தையின் கடன் முடிக்க அங்கு நிற்கின்றார் – ஆறுதல் அடைகின்றேன்.

என் மக்கள் இருவர் தாத்தாவைக் கண்டு கடமையையும் தீர்த்தனர் – ஆறுதல் அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மட்டும் அங்கு இல்லை என் கடனைத் தீர்ப்பதற்கு – ஆனால் வேண்டுகின்றேன் இறைவனை இங்கு – உங்கள் ஆத்ம சாந்திக்காக!

நான் அறிந்த மாமாவே – மனம் மிக நொந்தேன்

நெஞ்சம் பொறுக்கவில்லை – அன்று

இப்படியே இருந்து விட்டால் உங்கள் அறிவுக்கடலை

மடல் மூலம் நான் பெற்றதன் பயன் ஏது?

மனம் தெளிவாகின்றேன்...... திடமாயிருக்கின்றேன் இன்று. காரணம் கடவுளைக் கேட்கின்றேன்! இறைவா! என்னை ஆறுதல்படுத்தும்.

மாமாவின் ஆத்ம சாந்திக்காக!

நிச்சயமாய் அன்னையைக் கண்டிருப்பீர்கள்

ஆத்ம சாந்தி பெற்றிருப்பீர்கள் – ஆயினும்

இறைஞ்சுகின்றேன் இறைவனை இரு கரம் கூப்பி – நானும்

மாமாவின் ஆத்ம சாந்திக்காக!

என் கணவரின் சார்பிலும், பேரப்பிள்ளைகளின் சார்பிலும், என் குடும்பத்தவர்களின் சார்பிலும் இறுதியாக மீண்டும் என் சார்பிலும் மனம் நிறைந்து தொழுகின்றேன் இறைவா நின்னை.

மாமா உங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

மருமகள்

திருமதி நளினி விமலேஸ்வரன்

(அவுஸ்திரேலியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சாமியே சரணம் ஐயப்பா!



வையமும் வானும் வாழமறை முதல் தருமம் வாழ
செய்யும் நற்செயல்கள் வாழத் திருவருள் விளக்கம் வாழ
நையும் ஊழுடையார் தத்தம் நலிவகன் றினிது வாழ
ஐயனாய் அப்பனானாய் அவன்பதம் வணக்கம் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# விநாயகர் வணக்கம்

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸூத்ர
வாமன ரூப மஹேச்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

# தேவாரம்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

தோடுடைய செவியன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மான் இவனன்றே.

அங்கமும் வேதமும் ஓதும் நாவ அந்தணர் நாளும் அடி பரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்தர் சொல்லால்
செங்கையலார் புனல் செல்வம் மல்கும் சீர்கொள் செங்காட்டம் குடியதனில்
கங்குல் விளங்கத்தீயேந்தி ஆடும் கணபதீச்சரம் காமுறவே.

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக் குயாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளோடும் பெருந்தகை யிருந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை யரனே.

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உன்கழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதி வைத்த புண்ணியனே
இதுவோ எமையாளுமா றீவதொன்றமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை யரனே.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது உன்பணியே
அமரர்கள் செய்வது உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே.

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாய தென்ன கொள்கையே.

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பது உந்தமக் கூனமன்றே
கைவினை செய்துஎம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெம்மைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புறு சிந்தையர் ஆகி அடியவர்
நன்புறு நல்லூர் பெருமணம் மேவிநின்று
இன்புறு மெந்தை இணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டு செய்வாரே.

நறும் பொழில் காழியுள் ஞான சம்பந்தன்
பெறும் பதம் நல்லூர் பெருமணத்தானை
உறும் பொருளாற் சொன்ன ஒண் தமிழ் வல்லார்க்கு
அறும் பழிபாவம் அவலம் இலரே.

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே.

கருவுற்ற நாள் முதலாக உன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங் கிடந்தலந்தெய்த் தொழித்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற்றிலாமையும் கண்டிரங்காய் கச்சியேகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலி யூரானே.

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்
அளியற்றார் பிறந்தவாறேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தை ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தரவேண்டும் இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கியிருந் தருள்செய் பாதிரிப் புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே.

மனத்தகத்தான் தலை மேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர் தஞ்சிரத்தின்
மேலான் ஏழண்டத்தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங் கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்துச்சியுள்ளான்
காளத்தியான் அவனென் கண்ணுளானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணு கேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர்கழை கண்ணில்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணு ள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போதுணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

பித்தா பிறை சூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணை நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனெனலாமே.

தானெனை முன்படைத்தான் அது அறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்த
வானென வந்தெதிர்கொள் மத்தயானைக் கருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான் மலையுத்தமனே.

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கு மடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரிர் வாழ்ந்து போதீரே.

ஆலந்தானுகந் தமுதுசெய் தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாளுமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பனெம் மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக்கு உடனாகி
மாழை யொண்கண் பரவையை தந்தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேனென் ஆரூர் இறைவனையே.

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை யெளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்தணி
ஆரூரானை மறக்கலுமாமே.

மற்றுப் பற்றெனக்கின்றி நின்றிருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மை வந்தெய்தினேன்
க[illegible]வர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
[illegible]றவா உனை நான் மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதுமையுற வில்லையே.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவும் பரிசொன்று றறியேன் நான்
பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும்
எய்த நினைய மாட்டேன் நான்
கரவில் அருவி கமுகுண்ணத்
தெங்கங் குலைகீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேன்உடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தா னின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய்அண்ணா
வெள்ளந்தான் பாயாதான் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே.

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமையும் எல்லாமுங்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

என்னா லறியாப் பதந்தந்தாய்
யான தறியா தேகெட்டேன்
உன்னா லொன்றுங் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடா
தென்னா யகமே பிறப்பட்டிங்
கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே.

பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தான் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டக் கோவான் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்ததுன்றன்னைக் கொண்டதென்றன்னைச்
சங்கரா வார் கொலோ சதுர
ரந்த மொன்றில்லா வானந்தம் பெற்றே
னியாது நீ பெற்ற தொன்றென் பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப் பெருந்துறை யுறை சிவனே
யெந்தையே யீசாவுடலிடங் கொண்டா
யானிதற் கிலனோர் கைமாறே.

கண்க ளிரண்டும் அவன் கழல்
கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள் தம் வாழ்விலென்
வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு
மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம்
இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலோ
டாடல் பணின்றிடு மாகாதே
பாண்டினன் னாடுடை யான்படை
ஆட்சி பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்
வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படு மாயிடிலே.

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு
முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள்
பாறும் வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி
யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா
றார்பெறுவா ரச்சோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லை யிரும்பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாகசம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன்அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்ய விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தோனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரி பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்தநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற் (கு)
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண்அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மாமலை அன்னகோவுக் (கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம்ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மாடு நாகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக் (கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாக்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

பவள மால்வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளித் திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்று பொற்குழல் திருச்சடையும்
திவளமாளிகை சூழ்திருத் தில்லையில்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல் மெழுகொக்கின்றதே.

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேக நாயகனை மிகுதிருவீழிமிழலை
விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்ற
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

கருவினுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து - மதனாலே
கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலை பெரிதாகி நொந்து - மிகவாடி
அரகரசிவாய வென்று தினமு நினையாமல் நின்று
அறு சமய நீதி ஒன்றும் - அறியாமல்
அசன மிடுவார்கள் தங்கள் மனைகள்தலை வாசல் நின்று
அனுதினமும் நாணமின்றி - அழிவேனோ
உரகபட மேல் வளர்ந்த பெரிய பெரு மாளரங்கர்
உலகளவு மால் மகிழ்ந்த - மருகோனே
உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறை புகலி யூரிலன்று - வருவோனே
பரவை மனை மீதிலன்று ஒரு பொழுது தூது சென்ற
பரமனருளால் வளர்ந்த - குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர் சிறை மீளவென்று
பழநிமலை மீதில் நின்ற - பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரமுமாகி யதிபனுமாகி அதிகமுமாகி - அகமாதி
அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி - அவர்மேலாய்
இகரமுமாகி யெவைகளுமாகி யுனிமையுமாகி - வருவோனே
இருநில மீதிலெளியனும் வாழ எனது முன்ஓடி - வருவோனே
மகபதியாகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் - வடிவோனே
வனமுறை வேடனருளிய பூசை மகிழ்கதிர்காம - முடையோனே
செக கண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு - மயிலோனே
திரு மலிவான பழமுதிர்சோலை மலைமிசை மேவும் - பெருமாளே.

நாத விந்துக லாதீ நமோ நம
வேத மந்ரசொ ரூபா நமோ நம
ஞான பண்டித சாமி நமோ நம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்தம யூரா நமோ நம பரசூரர்
சேத தண்டவி நோதக நமோ நம
கீத கிண்கிணி பாதா நமோ நம
தீர சம்ப்ரம வீரா நமோ நம கிரிராஜ
தீப மங்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூசையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீபாத சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முன்னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி அந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அபிராமியந்தாதி

## காப்பு

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே! உலகுஏழும் பெற்ற
சீர்அபிராமி அந்தாதி எப்போதுமென் சிந்தையுள்ளே
கார்அமர் மேனிக் கணபதியே! நிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே. 1

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே. 2

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே. 3

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே. 6

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 7

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண்மகி டன்றலைமே
லந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாளென் கருத்தனவே. 8

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமுஞ் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே. 9

நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு ளேயுமையே யிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே. 10

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாள்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணிய துன்புகழ் கற்றதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே. 13

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே. 14

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்தார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிபள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரு
மொளியே யொளிரு மொளிக்கிடமே யெண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
யளியே னறிவள விற்கள வான யதிசயமே. 16

அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
யவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே. 18

வெளிநின்ற நின்றிரு மேனியைப் பார்த்தேன் விழியுநெஞ்சுங்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
வெளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே. 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைகின்ற நின்றிருக் கோயிலின் கேள்வ ரொருபக்கமோ
வறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுதம்
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ் சகமோவென்ற னெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. 20

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயிற் றாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 21

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
யடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே. 22

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந் தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவிலகுக்
குள்ளே னைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே. 23

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கு
மன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
யென்னே யினியுன்னை யான்மற வாமனின் றேத்துவனே. 25

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்துங்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றாளிணைக்கென்
னாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே. 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
யடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே. 28

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண் டாய் கொண்ட தல்லவென்கை
நன்றே யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுட்
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் றிருவுளமே
யொன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே. 30

உமையு முமையொரு பாகரு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணு தற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
யமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே. 31

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லபற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லாங்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
யுழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்தே. 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகந்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே. 34

திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
வெங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறத்தவிண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே. 35

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்செய்யு
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்ற
னருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே. 36

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே. 37

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையா
ளவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே. 38

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணு தலே. 39

வாணு தற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணு தற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சிற்
காணு தற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணு மன்பு
பூணு தற் கெண்ணிய வெண்ணமன் றோமுன்செய் புண்ணியமே. 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தா
னண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்வரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொற்
றிரிபுர சுந்தரி சிந்தூர மேனியள் தீமைநெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
யெரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே. 43

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமா
மவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினா
லிவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந்
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே. 45

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே. 46

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநில
மேழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகற்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சி
லிடருந் தவிர்த்திமைப் போதிருப் பார் பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே. 48

குரம்பை யடுத்துத் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே. 49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்பரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரண மரணமக்கே. 50

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கண்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே. 51

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
வையன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையிமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே. 53

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
யுன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றில்லையே. 55

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவா
ரன்றா லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே. 56

ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லா
முய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையுங்கொண்டு சென்றுபொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே. 57

அருணாம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணாம் புயமுலைத் தையனல் லாடகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமுங் கராம்புயமுஞ்
சரணாம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றி லேனொற்றை நீள்சிலையு
மஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே. 59

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ய பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே. 60

நாயே னையுமிங் கொருபொரு ளாகநயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய் நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன
றாயே மலைமகளே செங்கண் மாறிருத் தங்கைச்சியே. 61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகநகச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே. 62

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றிற் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமய
மாறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கந்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. 65

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்திரு நாமங்க ளோத்திரமே. 66

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்வை யாதவர் வண்மைகுலங்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பு
மூரு முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியிற்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமு
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
விழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென்குறையே. 71

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கி
னின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே. 72

தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பி
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கைக ணான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே. 73

நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமு நாரணனு
மயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தபனியக் காவினிற் றங்குவரே. 74

தங்குவர் கற்பகத் தாருவினீ ழலிற் றாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே. 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தேன் மனத்தினின் கோலமெல் லாநின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டீ
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றைமெய்யிற்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. 76

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்ச
ருயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமே
லப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரவக் குழையும் விழியின் கொழுங்கடையுந்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென் றுணைவிழிக்கே. 78

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நகரக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
யோட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணங்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமுங் களிக்கின்றவா
வாட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே. 80

அணங்கே யணங்குக ணின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை வாழ்த்துகிலே னெஞ்சில் வஞ்சகரோ
டிணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே. 81

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்
னொளிாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுதொறுங்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே. 82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமல
மிரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியு
முரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே. 83

உடையாளை யொல்குசெம்பட்டுடை யாளை யொளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூ
லிடையாளை யெங்கள்பெம் மானிடையாளை யிங்கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாந்
தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே. 85

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போதுங் வெளிநில்கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கும் நினைவுக்கும் மெட்டாத நின்றிரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
யழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே. 87

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பக்தருக்குட்
தரமன் றிவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே. 88

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
வுறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே. 89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. 90

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணத் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே. 91

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்ற
னிதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யானொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே. 92

நகையே யிஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநா
மிகையேயிவடன் றகைமையை நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளக
மரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாந்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே. 94

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லா
மன்றே யுனதென் றனித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருகட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. 95

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயி றன்னைத்தம்மா
லாமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே. 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதற்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே. 98

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாங்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையு
உழையைப் பொருகண்ணு நெஞ்சிலெப்போது முதிக்கின்றவே!. 100

## நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத் தாளை, புவி அடங்கக்
காத்தாளை, அம்குச பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.

முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டணத்துப் பிள்ளையார் அருளிய
## உடற்கூற்று வண்ணம் (இசை வாய்ப்பாடு)

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த
தந்ததனதான தனதானனா

ஒருமட மாது மொருவனுமாகி
இன்ப சுகந்தரு மன்பு பொருந்தி
யுணர் கலங்கி வொழுகிய விந்து
வூறு சுரோணித மீது கலந்து

பனியிலொர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கமட மிதென்று
பார்வை மெய்வாய்செவி கால்கை ளென்ற

உருவமு மாகி யுயிர்வளர் மாத
மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
யுதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமு நாளு மறிந்து

மகளிர்கள் சேனைதரவணை யாடை
மண்படி வுந்தியுதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து

ஒளி நகை யூற லிதழ்மட வாரு
முவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியிலிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமணி யாடை யரைவட மாட
　　உண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவில் இருந்து புழுதி யளைந்து தேடிய பாலரொ டோடி நடந்து
　　அஞ்சு வயதாகி விளையாடியே

உயர்தரு ஞான குருவுப தேச
　　முத்தமிழின் கலையுங் கரைகண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
　　வாழ்பதி னாறு பிராயமும் வந்து

மயிர்முடி கோதி யறுபத நீல
　　வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொ னிலங்கும் பணிக ளணிந்து
　　மாகதர் போகதர் கூடி வணங்க

மதன சொரூப னிவனென மோக
　　மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய வெறிந்து
　　மாமயில் போலவர் போவது கண்டு

மனது பொறாம லவர்பிற கோடி
　　மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமு துண்டு
　　தேடிய மாமுதல் சேர வழங்கி

ஒரு முதலாகி முதுபொருளாக
　　இருந்த தனங்களும் வம்பி லிழந்து
மதன சுகந்த விதன மிதென்று
　　வாலிப போலமும் வேறு பிரிந்து

வளமையும் மாறி இளமையும் மாறி
　　வன்பல் விழுந்திரு கண்களிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து வாத விரோத குரோத மடைந்து
செங்கையி னில்ஓர் தடியு மாகியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது போல தொருமுது கூனும்
மந்தி யெனும்படி குந்தி நடந்து
மதியு மழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து

துயில்வரு நேர மிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சு முலர்ந்து வறண்டு
துகிலு மிழந்து கணையு மழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு

கலியுக மீதி லிவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து

தெளிவு மிராம லுரைதடு மாறி
சிந்தையு நெஞ்சு முலைந்து மருண்டு
திடமு மழிந்த மிகவு மலைந்து
தேறி நாலதர வேதென நொந்து

மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற

கடன்முறை பேசு மெனவுரைநாவு
றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவிழி கஞ்சி யொழுகிட வந்து பூதமு நாலு சுவாசமு நின்று
நெஞ்சு தடுமாறி வருநேரமே.

வளர்பிறை போல வெயிறு முரோம
முஞ்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனது மிருண்ட வடிவு மிலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைகொடு வீசி யுயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியி விழுந்த மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் கால சறிந்து

பழையவர் காணு மெனுமய லாவர்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்த
ரிடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று

பலரையும் ஏவி முதியவர்தாமிரு
ருந்தசவம்கழு வுஞ்சிலர்என்று
பணிதுகில் தொங்கல் களபம்அணிந்து
பாவகமேசெய்து நாறும் உடம்பை

வரிசை கெடாம லெடுமென வோடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து

விறகிடை மூடி யழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்த நிணங்க
ளுருகி யெலும்பு கருகி யடங்கி யோர்பிடி நீறு மிலாத வுடம்பை
நம்புமடி யேனை யினியாளுமே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நன்றி நவில்கின்றோம்

புங்குடுதீவு இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சுருவிலைப் புகுந்தவிடமாகவும் கொண்டு அண்மையில் 18-07-1997 வெள்ளிக்கிழமை அன்று இறையடியெய்திய எமது பாசத்துக்குரிய குடும்பத் தலைவர் முன்னாள் ஓய்வுபெற்ற அதிபர் – "வித்தியா கலாபமணி" திரு. பொன். சோமசுந்தரம் அவர்கள் தம் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்தும், மலர் அஞ்சலி செலுத்தியும், வெளிநாடுகளிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தவர்களுக்கும், பரமன் புகழ் பாடியவர்களுக்கும், அந்தியேட்டி, சபீண்டீகரணக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவி நல்கியவர்களுக்கும், அனைத்துக் கிரியைகளையும் நடாத்தி வைத்த அந்தணப் பெரியோர்களுக்கும், இன்னும் எவரையாவது மறந்திருப்பின் அவர்களுக்கும், இவ் "சுந்தரத் தீபம்" எனும் நினைவு மலரை அழகுற அச்சிட்டுத்தந்த கொழும்பு லக்ஷ்மி அச்சகத்தாருக்கும், உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியை நவில்கின்றோம்.

125, பிக்கரிங்ஸ் வீதி,<br>கொழும்பு-13.<br>தொ. பே: 338449

இங்ஙனம்<br>மக்கள், மருமக்கள்<br>பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியதோர் குடும்பம்

* அமரர்கள்

× பொன்னையா + × வள்ளியம்மை
||
* ஆறுமுகம் + * அன்னலஷ்மி
சிவக்கொழுந்து + * தம்பிப்பிள்ளை
* முருகேசு + செல்லம்மா
* சோமசுந்தரம் + * தங்கம்மா
* சுந்தரம் + சிவகாமசுந்தரி

× தம்பு + × புவனம்
||
* கஜவல்லியம்மா + * வேலுப்பிள்ளை
* தாமோதரம்பிள்ளை + தையல்நாயகி
* மனோன்மணியம்மா + * செல்லப்பா
* தில்லையம்பலம் + சரஸ்வதி
யோகம்மா + * நல்லையா
* தங்கம்மா + * சோமசுந்தரம்

* சோமசுந்தரம் + * தங்கம்மா
||

| | | | |
|---|---|---|---|
| விமலேஸ்வரன் | மணிவண்ணன் | ரதி | திருமகள் |
| + | + | + | + |
| நளினி | வேஜினியா | மன்மதராஜன் | மனோரஞ்சன் |
| \|\| | \|\| | \|\| | \|\| |
| கஜன்<br>கார்த்திக்<br>நிவேதா | றயன் | லவன்<br>பானு | லக்ஷ்மன்<br>மயூரி<br>ராம்ராஜ் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் கண்ணதாசன் - அனுபவ மொழிகள்

- மரணம் வெல்ல முடியாததென்பதை அறிந்தும், மனிதர்கள் மரணத்தை எண்ணிக் கலங்குகிறார்களே.

- இறந்து போனவர்களை சைவர்கள் "சிவபதவி" அடைந்தான் என்கிறார்கள். அந்தப் பதவி இந்தப் பதவி என்று அலைகின்ற மனிதன், கடைசியாக அடைகின்ற பதவியே சிவபதவி. உச்சமான பதவி அது. உன்னதமான பதவி அது. எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பதவி அது. சீக்கிரம் கிடைக்க வேண்டும் என்று பலரும் விரும்பாத பதவி அது. நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தப்ப முடியாத பதவி அது. அந்தப் பதவி தவிர்க்க முடியாதது.

- நெருப்பில் இறங்கிய பிறகு வெயிலுக்குப் பயப்படுவதில் அர்த்தமில்லை.

- தன் ஆன்மாவை வருத்திக் கொள்வதன் மூலம், மற்ற ஆன்மாக்களைத் திருத்தியமைக்கும் தர்மகர்த்தா தியாகத்திற்குத் தயாராகுங்கள்.

- உனது ஆற்றல் உண்மையிலேயே ஆற்றலாக இருக்க வேண்டுமானால், உண்மை உனக்கு உதவவேண்டும்.

- மரத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, 'போகிறேன் போகிறேன்' என்றால் போக முடியாது, மரத்தை விட்டால்தான் போகலாம்.

- படைப்பின் நோக்கங்கள், படைப்பின் போதே தெளிவாக்கப்பட்டு விட்டன. தினமும் பாடஞ் சொல்லிக் கொண்டிருப்பது என் வேலையல்ல.

### தேற்றம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தில் - வேண்டா
நமக்குமது வழியே நாம்போமளவும்
எமக்கென்ன என்று இட்டுண்டிரும்.

-ஔவைப் பிராட்டியார்

நூல் வடிவமைப்பு:
கவிஞர் வேலணை வேணியன்

Printed by: Luxmi Printer-195, Wolfendhal St. Col-13. Tel:330588, 448546

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org